திரு. பி. ஜி. கருத்திருமன்: எனக்குத் தெரியும். பொடிவைத்துப் பேசுவதிலே கெட்டிக்காரர்கள். ஆகையால் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் தனிக்கொடி கேட்பார்களே (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:—கேட்கட்டும்!) அப்படியானால், லட்சக்கணக் கான கொடிகளாக பறக்கும். ஆகவே இந்த நிலை தேவைதானா?

என்னுடைய பரந்த உள்ளம் என்று சொன்னார்கள். கொடியைத் தனிப் பிரச்சினையாக செய்தார்கள். நிதியைப் பற்றிக் கேளுங்கள். நாங்களும் சேர்ந்து போராடுகிறோம். இதிலே அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. மத்திய சர்க்காரிடத்திலே எங்களுக்கு ஏதாவது கொஞ்சம் நஞ்சம் இருந்தால், அதை வைத்துப் போராடுவதற்கு தயாராக இருக்கிறோம். தமிழ்நாட்டு மக்களுடைய எதிர்கால பிரச்சினை நம்முடைய சந்ததியாருடைய பிரச்சினை. ஆனால் நாட்டைப் பிரிக்கும்படியான எண்ணத்தை, மக்கள் உணர்ச்சியைத் தூண்டிவிடும் படியான விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று என் கட்சியின் சார்பில் சொல்லிக் கொண்டு எனது பேச்சை முடிக்கிறேன்.

8. அமைச்சர் விளக்க உரை

தாம் கேள்வி நேரத்தில் அளித்த துணைவிடை குறித்து உணவு—வணிகவரித் துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் நான் இன்று கேள்வி நேரத்தின்போது சொல்லிய பதிலில் மத்திய அரசாங்கத்திடமிருந்து தகவல் வந்திருக் கிறது என்று சொன்னேன். அதற்காக வருந்துகிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவில்லை. ஆனால் டெல்லியிலுள்ள நமது அரசாங்கத் துறையிலிருந்து வந்திருக்கிறது. உணவுச் செயலாளர் அவர்கள் பதில் எழுதியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

7. தனியார் அலுவல்கள்—தொடர்ச்சி

தனித் தீர்மானம்—தொடர்ச்சி

மாநில தன்னாட்சி பெற மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களைப் பரவலாக்குதல்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தைப் பற்றி, கொண்டு வந்த நாள் அன்றும், இன்றும் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் விவாதத்தில் கலந்து கொண்டு, கருத்துக்களை எல்லாம் வெளி யிட்டார்கள். நான் அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இங்கு விரிவான ஒரு உரையை நிகழ்த்த விரும்பவில்லை. ஏனென்றால், நான் தமிழரசுக் கழகத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவ தெல்லாம், பொதுவாக இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்ளப் போகிறேன். வலி